DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 328/2024 Crime No. 251/2024 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | Pw5/LW12- திரு.ரவிக்குமார் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 29.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கள்ளக்குறிச்சி மாவட்டம், பெண்களுக்கு எதிரான குற்றத் தடுப்பு மற்றும் புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 10.06.2024 ம் தேதியன்று, நிலைய த.கா. திரு.வேலுமணி என்பவர் நிலைய அலுவலிலிருந்தபோது அந்தியூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற கந்தசாமி என்பவரது அசால்ட் இன்டிமேசனை பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மேற்படி கந்தசாமி என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து காவல் நிலையக் குற்ற எண்.251/2024, இதச 294(b), 323, 355, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் 11.06.2024, காலை 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று, சம்பவயிட சாட்சிகளான முருகன் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடத்திலிருந்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அங்கு கிடந்த செருப்பு ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். கைப்பற்றிய வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது,** பின்னர் சாட்சிகள் கந்தசாமி, மயில் (எ) காமராஜ், சங்கர், ரங்கசாமி, பெரியநாயகம், அறிவானந்தம், ஜெய் ஆனந்தன், முருகன் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்களை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் அன்றைய தினம் பகல் 14.30 மணிக்கு, குறிச்சி பிரிவு அருகே நின்றிருந்த எதிரி மோகன் என்பவரை விசாரிக்க குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் வாதி கந்தகாமிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றேன். **கந்தசாமி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய**

**காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 02.07.2024 ம் தேதியன்று, எதிரி மீது இதச 294(b), 323, 355, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.